1974 எப்ரல் 9]

தீர்மானம் பேரவையின் முடிவுக்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டு, அனுமதி வழங்கப்பட்டது.

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : இச்சட்ட முன்வடிவை அறிமுகம் செய்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இச்சட்ட முன்வடிவு அறிமுகம் செய்யப் பட்டிருக்கிறது.

(உ) தமிழ் நாடு, 1974-ம் ஆண்டு இந்து சமய அறக்கட்டளைகள் (நான்காம் திருத்த) சட்ட முன்வடிவு.

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : தலைவர் அவர்களே, தமிழ் நாடு, 1974-ம் ஆண்டு இந்து சமய அறக்கட்டளைகள் (நான்காம் திருத்த) சட்ட முன்வடிவை அறிமுகம் செய்ய அனுமதி கோருகிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவுக்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டு, அனுமதி வழங்கப்பட்டது.

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : இச்சட்ட முன்வடிவை அறிமுகம் செய்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இச்சட்ட முன்வடிவு அறிமுகம் செய்யப் பட்டிருக்கிறது.

(ஊ) தமிழ் நாடு, 1974-ம் ஆண்டு நிதி ஒதுக்க (எண் 2) சட்ட முன்வடிவு (சட்டப் பேரவை சட்ட முன்வடிவு எண் 18/74).

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : தலைவரவர்களே, . . .

(5) நடைமுறைக் கேள்விகள்—தொடர்ச்சி.

(இ) ஏற்கனவே அனுமதியளிக்கப்பட்ட தொகைக்கும் சேர்த்து 1974-ம் ஆண்டு நிதி ஒதுக்க (எண் 4) சட்ட முன்வடிவில் இரண்டாவது முறையாக ஒட்டு மொத்தமாக அனுமதி கோரியது முறைதானா என்பது குறித்து.

* **திரு. ஏ. ஆர். மாரிமுத்து :** ஆன் எ பாயிண்ட் ஆப் ஆர்டர். இந்த நிதி ஒதுக்க மசோதாவைக் கொண்டுவருவதற்கு முன்பாக இடைக்கால ஏற்பாடாக 192 கோடி ரூபாய்க்கு இந்தச் சபை அனுமதி அளித்திருக்கிறது. அப்படி ஏற்கனவே அனுமதி அளித்த பிறகு அந்தத் தொகையையும் சேர்த்து, இரண்டாம் தடவையாக ஒட்டுமொத்தமாக இந்த மசோதா கொண்டு